மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை :– திருமதி.P.அனுராதா, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2024 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 05 ம் நாள் வெள்ளிக்கிழமை

இ.மஎண்.09/2023
உள்
அசல் வழக்கு எண்.10/2019
--------

1. சா.நாராயணசாமி (இறப்பு)
2. செ.சரோஜினி
3. சு.விஜயலட்சுமி ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. சா.கந்தசாமி (இறந்துவிட்டார்)
2. சா.ராமசாமி (இறப்பு)
3. தில்லையம்மாள்
4. வீரப்பன்
5. சுப்புராஜ் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

1. சாந்தி
2. செல்வபிரியா
3. சூரியா ... 6 முதல் 8 உத்தேச எதிர்மனுதாரர்கள் /உத்தேச பிரதிவாதிகள்

இந்த மனு 12.07.2023 ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 19.03.2024–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.இலட்சுமிகாந்தன் அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ராமசுப்பிரமணியன் அவர்கள் ஆஜராகியும், 6 முதல் 8 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜி.ஆர்.முருகன் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர்கள் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 22 விதி 4 மற்றும் 151–ன் கீழ் இம்மனுவினை ஏற்று அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், 2ம் பிரதிவாதியின் வாரிசுகளான மனுவில் கண்ட நபர்களை தாவா வழக்கில் கட்சிக்காரர்களாக சேர்க்க அனுமதியளித்து உத்தரவிடக்கோரி 06.04.2023ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:–</u>**

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி கட்சி செய்து வருகிறார்கள். தாவா வழக்கு விவாதத்திற்கு போடப்பட்டிருந்தபோது 1ம் பிரதிவாதி இறந்துவிட்டார். அவரது வாரிசுகளை தாவா வழக்கில் 3 முதல் 5 பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டு கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்தா ஏற்பட்டிருந்தது. இந்நிலையில் 2ம் பிரதிவாதி ராமசாமி 02.12.2022ம் தேதி இறந்துவிட்டார். எனவே, 2ம் பிரதிவாதியின் வாரிசுகளை கட்சிக்காரர்களாக சேர்த்து வழக்கை நடத்த வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது. எனவே, 2ம் பிரதிவாதியின் வாரிசுகளை தாவா வழக்கில் கட்சிக்காரர்களாக சேர்க்க அனுமதியளித்து உத்தரவிடக்கோரி மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

3) **<u>3 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்</u>**:–

மனுதாரர் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் யாவும் மறுக்கப்படுகிறது. மேற்படி மனுவை மனுதாரரே நிரூபணம் செய்ய கடமைப்பட்டவர். மேற்படி மனுவில் 2ம் பிரதிவாதி கடந்த 02.12.2022ம் தேதி காலகமாகிவிட்டார் என்று தனது மனுவில் தெரிவித்துள்ளார். ஆனால் மனுதாரர் 06.04.2023ம் தேதி தான் மனு தாக்கல் செய்துள்ளார். உரிய காலத்திற்குள் மனு தாக்கல் செய்யப்படவில்லை. மேற்படி மனுவில் குறிப்பிட்டுள்ள 2ம் பிரதிவாதிக்கு இறப்பு மற்றும் வாரிசு சான்று மனுவுடன் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, மனுதாரர் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும்

செல்லத்தக்கதல்ல. எனவே, மனுதாரர் மனுவை எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4) **உத்தேச 6 முதல் 8 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்:–**

மனுவானது 2ம் பிரதிவாதியான ராமசாமி என்பவர் இறந்துவிட்ட காரணத்தினால் அவரது வாரிசுகளான உத்தேச எதிர்மனுதாரர்களை பிரதிவாதிகளாக சேர்க்கக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனுவில் கோரியுள்ள யாதொரு பரிகாரமும் மனுதாரர்கள்/வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதல்ல. மனுவானது சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. மனுவானது வழக்கின் பொருண்மைப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. எனவே, உத்தேச எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையை ஏற்று மனுதாரர்கள்/வாதிகளின் மனுவை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

5) **இ.ம.எண்.08/2022ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையை இ.ம.எண்.11/2022ல் ஏற்றுக்கொள்ளுமாறு 4ம் எதிர்மனுதாரர்/4ம் பிரதிவாதி தரப்பில்மெமோ தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

**4ம் எதிர்மனுதாரர்/4ம் பிரதிவாதி தரப்பில் இ.ம.எண்.08/2022ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்**:–

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவானது சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. வழக்கில் கண்ட 1ம் பிரதிவாதி 21.09.2020ம் தேதி இறந்துவிட்டார் என்றும், அது மனுதாரருக்கு 20.01.2021ம் தேதியில் தெரிய வந்தது என்றும், அன்னாரது வாரிசுகள் தற்போது தான் கிடைக்கப்பெற்றது என்றும், அதனால் 5ம் பிரதிவாதியை சேர்ப்பதில் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது என்றும் கூறியுள்ளார். மேலும் மனுதாரர் தனது மனுவில் 5ம் பிரதிவாதியை சேர்க்க வேண்டுமென்றும், 9ம் பிரதிவாதி என்றும், முன்னுக்குப்பின் முரணாக கூறியுள்ளார். அதனால் யாரை அசல் வழக்கில் சேர்க்க உள்ளார் என்று தெரியவில்லை. மனுதாரர் வாரிசுகளை சேர்க்க ஏற்பட்ட

காலதாமதத்திற்கான சரியான காரணங்கள் ஏதும் தெரிவிக்கப்படவில்லை. அதனால் மனுதாரர் மனுவானது எதிர்மனுதாரர் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

6) இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

7) இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

8) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

**9) தீர்வு**:–

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிருரையும் அதுகுறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. மனுதாரரால் 2 ம் பிரதிவாதியின் வாரிசுகளான மனுவில் கண்ட நபர்களை தாவா வழக்கில் கட்சிக்காரர்களாக சேர்க்க அனுமதியளித்து உத்தரவிடக்கோரி 06.04.2023 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரருக்கு தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டமும் ஏற்படக்கூடும். ஒரு வழக்கைப் பொறுத்து தரப்பினர் ஒருவர் இறந்துவிட்டால் அவரது தரப்பில் அவரை சார்ந்தவரோ, அவரது வாரிசுகளோ வழக்கை மேல்நடத்த வேண்டியது அவசியமான மற்றும் நியாயமான ஒன்றாகும். மேலும், இம்மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் இவ்வழக்கு சம்பந்தமான வேறு வழக்குகளும் எழக்கூடும். மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வாறு இழப்பு ஏற்படும் என்பது குறித்து எதிருரையில் எதிர்மனுதாரர் குறிப்பிட்டு கூறவில்லை. எனவே, மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இருப்பினும், இந்த வழக்கில் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட காலவிரையம் மற்றும் இதர விரையங்களை கருத்திற்கொண்டு மனுதாரர்கள் கூட்டாக ஸ்ரீவில்லிப்புத்தூர் இலவச சட்ட உதவி மையத்திற்கு செலவு தொகையாக ரூ.300/—ஐ வரும் 22.04.2024ம் தேதியன்றோ, அதற்கு முன்பாகவோ செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும்பட்சத்தில் தக்க உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று இ.ம.எண்.08/2023ல் பிறப்பிக்கும் உத்தரவுக்கிணங்க இம்மனுவில் உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. அழைக்க வாய்தா —22.04.2024

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை, வாதுரைகள் மற்றும் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு, 2ம் பிரதிவாதியின் வாரிசுகளான மனுவில் கண்ட நபர்களை தாவா வழக்கில் கட்சிக்காரர்களாக சேர்க்க அனுமதியளித்து உத்தரவிடக்கோரி 06.04.2023ம் தேதி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை மனுதாரர்கள் கூட்டாக ஸ்ரீவில்லிப்புத்தூர் இலவச சட்ட உதவி மையத்திற்கு செலவு தொகையாக ரூ.300/—ஐ வரும் 22.04.2024ம் தேதியன்றோ, அதற்கு முன்பாகவோ செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும்பட்சத்தில் தக்க உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று இ.ம.எண்.08/2023ல் பிறப்பிக்கும் உத்தரவுக்கிணங்க இம்மனுவில் உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. அழைக்க வாய்தா —22.04.2024

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 05ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

உத்தேச எதிர்மனுதாரர்கள்/உத்தேச பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சாத்தூர்.
இ.ம.எண்.09/2023
உள்
அ.வ.எண்.10/2019

**உத்தரவு**

நாள்– 05.04.2024